# புங்குடுதீவுப் பகுதியில் கடற்படையினர் இருதினங்களாக பீரங்கித் தாக்குதல்

புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதிகளில் கடந்த இரு தினங்களாக கடற்படையினர் பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் இத்தாக்குதல்கள் நள்ளிரவு நேரங்களிலேயே நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. தீவுப்பகுதிகளின் கடற்பகுதியில் தற்போது கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப் பட்டிருக்கின்றது. அனலைதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் படையினர் தேடுதலையும் மேற்கொண்டனர். மாலையானதும் கடலில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் பீரங்கித்தாக்குதல்களும் ஆரம்பித்து விடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சில வாரங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டு கடலில் வீசப்பட்ட 21 இந்திய மீனவர்கள் நீந்தி தீவுப் பகுதியில் கரைசேர்ந்த சம்பவத்தைத் தொடர்ந்தே தீவுப்பகுதியில் இவ்வாறு கடற்படையினரின் கெடுபிடி திடீரென அதிகரித்துள்ளதாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர். (07)


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 273 பிரசோற்பத்தி புரட்டாதி 27 ( 13 - 10 - 1991 ) ஞாயிறு


# மீண்டும் இம்மாத இறுதியில் நம்பிக்கையில்லாப்பிரேரணை!

## லலித் குழுவினர் திட்டமிடுகின்றனராம்

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினரும் ஐ. தே. க. அதிருப்தியாளர்களும் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்த இந்நிலையில் மீண்டும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஐ. தே. க. அதிருப்தியாளர் குழு திட்டமிட்டுள்ளது.

இம்மாத இறுதியில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர லலித் தலைமையிலான அதிருப்தியாளர் குழு திட்டமிட்டுள்ளதாக பி. பி. ஸி, நேற்றிரவு தெரிவித்தது.

இம்முறை சமர்ப்பிக்கப் படும் பிரேரணையில் கடந்த வருடம் விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதம் வழங்கிய சம்பவத்தையே முக்கிய குற்றச்சாட்டாக முன்வைக்க இக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை ஜனாதிபதி பிரேமதாஸ தமக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைகளில் இருந்து மீண்டுள்ளதால் அவரின் நிலை தற்போது உறுதியா

—04 ஆம் பக்கம் பார்க்க

## குமண பயணம்

அவசர சிகிச்சைக்கான நோயாளர்களையும், தபாற் பொதிகளையும் ஏற்றிக் கொண்டு குமண கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கொழும்பு புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது, 04,07.

## கடற்படை பீரங்கித் தாக்கு

நேற்று இரவு 7- 50 மணியளவில் காரைநகர் கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த கடற்படை பீரங்கிப்படகில் இருந்து பீரங்கித்தாக்குதல் நடாத்தப்பட்டது,

பாரிய சத்தங்களுடன் விழுந்து வெடித்தது தாக்குதலின் சேதவிவரங்கள் தெரியவரவில்லை, (01)

## நெடியவத்தை சுற்றிவளைப்பு படையினர் கடும் ஷெல் தாக்கு

மட்டக்களப்பு சின்னவத்தை இராணுவத்தினர் நெடியவெட்டைப பகுதியை சுற்றிவளைத்துத் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி படையினர் இப்பகுதிக்கு வந்த போது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர் படையினர் நெடியவெட்டைப் பகுதியில் பலத்த ஷெல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் காணிகள் அம்பாறையில் ஆக்கிரமிப்பு

அம்பாறை மாவட்டத்தில் இடம் பெயர்ந்துள்ள தமிழர்களின் குடியிருப்புக்கள் அழிக்கப்படுவதாகவும், அவர்களின் விவசாயக் காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

தமது நிலங்கள்! குடியிருப்புக்களைப் பார்வையிடச் சென்ற ஒரு சிலர் காணாமல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மூவாயிரம் தமிழக போலிஸார் அதிரடிப்படையாகின்றனர்!

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலை தடுப்பதற்கென மாநிலத்தில் 11 கரையோர இலக்குகளில் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 75 பொலிஸார் கடமையிலிருப்பர்.

இத்தகவலை நேற்று தமிழ் நாடு சட்ட ஒழுங்கு பிரிவு

—04 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவிலிருந்து கடத்திய புடவைகள் பறிமுதல்

புத்தளம் பகுதியில் இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான புடவைகள் ஆனைமடுவ பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சாரங்கள், சேலைகள் அடங்கிய பெருந்தொகையான பொதிகள் லொறியில் எடுத்துச் செல்லப்பட்ட போதே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது இது தொடர்பாக மூன்று கடத்தல்காரரும் கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

## லகுகல காட்டில் படையினர்! கிராமத்தில் புலிகள் நடவடிக்கை

அம்பாறை லகுகலப் பகுதி காட்டில் படையினர் தேடுதல் நடாத்தும் இச்சமயத்தில் விடுதலைப்புலிகள் கிராமப்புறங்களில் சென்று தாக்குதல் நடாத்திவருகின்றனர் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

திருக்கோவில், தம்பிலுவில் கோமாரி கிராமங்களில் இப்போது புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி மேற்படி பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## தென்னிலங்கை வழக்கறிஞர் குழு முடிவை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் வழக்கு

ஜனாதிபதிக்கெதிரான குற்றவியல் பிரேரணையில் போதியளவு எம்.பிக்களின் கையொப்பம் இருந்தும் அதை திடீரென நிராகரித்த சபாநாயகரின் முடிவு செல்லாது என அறிவிக்க வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை மீண்டும் விவாதிக்க வேண்டும் எனவும்,

—04 ஆம் பக்கம் பார்க்க

## திருமதி சோனியா காந்தி அமெதியில் போட்டியிடார்!

எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் அமெதி தொகுதியில் தாம் போட்டியிடப்போவதில்லை என திருமதி சோனியா காந்தி அறிவித்துவிட்டார்,

திருமதி சோனியா காந்தியை சந்தித்த பின் நேற்றுக் காலை செய்தியாளர்களிடையே பேசிய பிரதமர் நரசிம்மராவ் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இவரது கணவரான ராஜீவ் காந்தியின் சொந்தத் தொகுதியான அமெதியில் கடந்த மேமாதம் 20 ஆம் திகதி நடை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வெளிச்சம் வெளியீட்டு விழாவில் மகேந்திரராசா இனமொன்றின் எழுச்சியை அடக்க கலை பண்பாடே எதிரியால் அழிக்கப்படும்

''எமது கலை இலக்கிய கர்த்தாக்கள் உண்மைகளை உண்மையாகவும், இருப்பதை இருப்பதாகவும் வெளிக்கொணர முற்பட வேண்டும் அதுவே எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கும்''

இவ்வாறு நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'வெளிச்சம்' இதழ் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைவர் மாத்தையா தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; கலை பண்பாடு ஆகிய இரண்டும் ஒரு தேசிய இனத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது ஒரு இனத்தின் வாழ்வுக்கு இவை இரண்டும் அத்தியாவசியம் தேவைப்படுகின்றன. ஓர் இனம் இன்னொரு இனத்தினை அடக்க முற்படும்போது கலை பண்பாடுகளையும் சிதைக்க முற்படும். கலை பண்பாடுகள் சிதைக்கப்படும் போது ஒரு இனத்தின் எழுச்சியானது மழுங்கடிக்கப்படுகிறது.

கலை பண்பாட்டின்வளர்ச்சி ஊடகங்களாக கலை இலக்கிய வடிவங்களும் விளங்கி வருகிறது இவற்றினை சிதைவடையாது பேணிப்பாதுகாப்பது போராட்டக் கடமைகளில் முக்கியமானதாகும். நமது கலை பண்பாட்டுக் கழகமானது இச்செயற்பாடுகளில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நாதஸ்வரமேதை திரு. என். கே. பத்மநாதன்

# மணிவிழாச் சிறப்பிதழ்

### மணிவிழா நாயகருக்கு கோண்டாவில் சகோதரர்களின்

## வாழ்த்து

''தந்தை, தாய், குரு தெய்வம்'' என்பது ஆன்றோர் வாக்கு. கல்வியை அளிக்கும் ஆசானும், இறையடி சேர வழிகாட்டும் ஆசானும் ''குரு'' என்ற பதத்திற்குள் அடங்குவர்.

கல்வி புகட்டும் ஆசானைப் போன்று கல்வித் துறையில் நமக்கு மானசீகமாக வழிகாட்டும் மனிதரும் குருவின் நிலையிலேயே வைக்கப்படுவர்.

தெய்வத்தைப் பிரத்தியட்சமாக நாம் காணும் இடம் தந்தை, தாய், குரு என்ற இம் மூவரிடமுமே.

நாதஸ்வர மேதை கலாசூரி என். கே. பத்மநாதன் அவர்கள் ஈழத்தில் நாதஸ்வரக் கலைக்கு ஒரு வழிகாட்டி அவரது இசைத்திறன் தனித்துவமானது

கர்நாடக இசையில் மனோதர்மம் முக்கியமானது இந்த மனோதர்ம இசைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் பத்மநாதன் அண்ணாவிடமிருந்து மானசீகமாகப் பல விடயங்களை நாம் நாளாந்தம் கற்றுக்கொளகிறோம்.

அவருடைய கலையம்சங்களிலிருந்து அவரது பழக்கவழக்கங்கள் வரை எல்லாமே நாம் கேட்டும் பார்த்தும் பின்பற்ற வேண்டியவை.

ஏகலைவன் துரோணரை மானசீக குருவாகக் கொண்டது போல் நாம் இருவரும் பத்மநாதன் அண்ணாவை எமது மானசீக குருவாகக் கொண்டுள்ளோம்

அவரது அறுபதாண்டு பூர்த்தி விழா இடம்பெறும் இத் தருணத்தில் அவரும் அவரது குடும்பத்தினரும் மேலும் அறுபது ஆண்டுகள் வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வி. கே. கானமூர்த்தி
வி. கே. பஞ்சமூர்த்தி

### நாளைய நிகழ்ச்சிகள்

இடம்:- நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்

தலைவர் :
யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்
தகைமிகு பேராசிரியர்
அ. துரைராசா அவர்கள்

2. 00 - 2 45 மணி : பண்ணிசை
திரு. இரா. ஞானசம்பந்தன் அவர்கள்

2. 45 - 3. 30 மணி
திரு. வி. சிவஞானசேகரம் அவர்கள்

3. 30 - 4. 30 மணி : மங்கள இசை
திருவாளர்கள்
கே. எம். பஞ்சாபிகேசன், எம். முருகையா
கே. ஆர். சுந்தரமூர்த்தி ரி. உதயசங்கர்
ஆர். கேதீஸ்வரன் எம். ராமதாஸ்

4. 30 - 5. 30 மணி :
வரவேற்புரை :
தலைமையுரை :
தொடக்கவுரை :
திரு. பொ. பாலசிங்கம் அவர்கள்
(ஆணையாளர் யாழ் மாநகரசபை)
அருளாளர் வாழ்த்து :
அருட்கவி சி விநாசித்தம்பி அவர்கள்
ஆன்றோர் வாழ்த்து :
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள்
அறிஞர் வாழ்த்து :
கலாநிதி இ பாலசுந்தரம் அவர்கள்
(தலைவர் தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)
கலைஞர் வாழ்தது : நாதஸ்வரமேதை
திரு பஞ்சாபிகேசன் அவர்கள்
கவிஞர் வாழ்த்து :
கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள்
கலைஞர் வாழ்த்து :
நவாலியூர் க. சச்சிதானந்தம் அவர்கள்

5. 30 - 6 30 மணி : புல்லாங்குழல்
டாக்டர் ரி செங்காதரன் அவர்கள்

6. 30 - 7. 30 மணி : வயலின் சோலோ
இசைஞான திலகம்
திரு. உ. இராதாகிருஷ்ணன் குழுவினர்

இசையரங்கு :
7. 30 - 8 30 மணி திரு எஸ். பத்மலிங்கம் அவர்கள்

நன்றியுரை



### மங்கல வாத்தியத்துக்கு ஒரு மங்கள விழா

ஈழத்தின் நாதஸ்வரப் பெருமரபுக்கு மணியான ஒரு வைபவம் வருகிறது ... .. திரு.என் கே பத்மநாதனுக்கு மணிவிழா.

இந்த விழாவில் யாழ்ப்பாணத்து இசை மரபின் ''ஆழமும் அகலமும்'' மீண்டும் சங்கமிக்கும்.

மற்றைய வைபவங்களுக்கெல்லாம் ''மங்களவாத்தியமாக'' அமையும் வாத்தியத்துக்கு ஒரு மங்கல நாள் அது.

பத்மநாதனும் அவர் புகழும் மேலும் மேலும் ஓங்குக!

திரு பத்மநாதன் அவர்களின் வாசிப்பு இல்லாது இன்றைய யாழ்ப்பாணத்துப் பண்பாடு பொலிவுறுவதில்லை என்பது ஏகோபித்த மக்கள் (ரசிகர்) தீர்ப்பு.

அவருக்கு இந்தப் புகழ் கிட்டியுள்ளமைக்கான ஒரு சாஸ்திரீய நியாயம் உண்டு. திரு பத்மநாதன் தனக்குக் கிடைத்துள்ள இன்றைய பிரபல்ய நிலையிலும் தனது ஆற்றுகை (கச்சேரி) சம்பிரதாய சுத்தமானதாகவும் கற்பனை வளமுள்ளதாகவும் அமையவேண்டுமென்பதற்காக தன்னைத் தான் ''அர்ப்பணித்து'' வாசிப்பவர். சங்கீதமொழியிற் கூறினால் 'உரைத்து' வாசிப்பவர் அந்த இசை வினயத்தினால் நாமும் அந்த இசையுணர்வின் ஆழத்துக்கே சென்று விடுகிறோம். ''மெய்மறந்த வாசிப்பு'' என்பது பத்மநாதனைப் பொறுத்தவரையில் வாயுபசாரத் தொடர் அல்ல; முற்றிலும் உண்மை. ஆரும் மெய் மறந்த நிலையில் வாசிப்பார். நம்மையும் மெய்மறக்கச்செய்வார்.

பத்மநாதன் அவர்களது மணிவிழா வருடத்தின்பொழுது அவருடைய வாசிப்பின் திறனைப் பிழிந்துவைக்கும் ஒலிப்பதிவுகள் நாடெல்லாம் பரவட்டும் ....தமிழர் வாழும் தேசங்கள் எல்லாம் செல்லட்டும்.

திரு பத்மநாதனின் மணிவிழா நமது ரசனையின் பெருவிழாவாகவும் அமையட்டும்.

கலைஞர்களுக்கு மூப்பு இல்லை; முதிர்ச்சியே உண்டு.

பத்மநாதனிடத்து கனிந்த முதிர்ச்சியுண்டு. இந்த முதிர்ச்சி அவருக்கும் நமக்கும் ஏற்கனவே பெருமை தந்துள்ளது.

திரு என்.கே.பத்மநாதன் புகழ் மேலும் வளர்க.. அவர் தனது வாத்தியம் போல 'மங்கலம்' பொலிய வாழ்க.

கார்த்திகேசு சிவத்தம்பி
தமிழ்ப்பேராசிரியர்,
தலைவர்.

நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

### சமாதான நீதவான் கலாசூரி நா. க. பத்மநாதன் அவர்களின் அறுபதாம் கல்யாண விழா

## வாழ்த்து

நாற்கவியால் நானிலத்தை யாண்டான் நற்றமிழன்
போர்க்கொடியைத் தூக்கினாலும் பேரிசையைப் பேணி நின்றான்
ஊர்க்கொடியில் இசைக்கருவி இட்டுவைத்தான் இராவணனும்
சைவமும் செந்தமிழும் சேர்ந்திலங்கா நின்றிட்ட
சுந்தரநாடதனில் சுரமேழும் சேர்த்திசைத்தான்
பாம்போடு நின்றாடும் பரமன் படுகோபம்
காம்போதி வாசித்துக் கடிதிற் கரைத்துவிட்டான்
அன்றதனைச் செய்தான் அதுவோர் கதையென்பார்
இன்றதனைச் செய்கின்றார் ஈழத்து இசைக்கலைஞர்
அதுவோர் கதையென்றால் இதுவுமோர் காதையன்றோ!
நாதமே இறைவனென நவின்றார் நம்மவர்கள்
நாதத்தை ஸ்வரமாக நனிதே கண்ணுற்றான்
நாதஸ்வரஞானி நா. க. பத்மநாதன்
நாகலிங்கம் கந்தசாமி நவின்ற அவன் தந்தை
ஆதிகுருவாக அமைந்திட்ட அழகோடு
பரிமளித்த இல்லமது அன்னை பரிமளத்தால்
ஒருமித்த இசைஞானம் ஒன்றன்பின் ஒன்றாக
வருகின்ற பேரறிஞர் வழிப்படுத்தி வைத்திட்டார்
வைத்த மறுகல்வி மைத்துனரும் அளித்திட்டார்
தந்தைபெயர் கொண்டார் அந்தஅறிஞருமே
எந்தை பிராட்டி பாலுண்ட சம்பந்தன்
சிந்தை கவர்ந்திட்ட சீர்காழிப் பதியீன்ற
திருநாவுக்கரசுவுடன் திருச்சேறைக் கிருஷ்ணமூர்த்தி
கருநாடகஇசையின் கருவுருவைத் தந்திட்டார்
உற்றபத்தோடு ஒன்றுசேர் வயதிருந்தே
கற்றகல்வியொடு கேள்வியறி வெல்லாம்
பெற்றநாட்டிற்கே பெரிதும் பெருமையன்றோ!
உலகத்து மக்களெல்லாம் உன் இசையை உவக்கின்றார்
பலகற்ற அறிஞர்கள் பற்பலவாய்ப் புகழ்கின்றார்
பார்மக்கள் பல்வேறாய்ப் போற்றிப் புகழ்ந்திடினும்
ஊர்மக்கள் உரைப்பதுவே உயர்ந்த பாராட்டு
இன்னிசையென்கின்ற இனிய நிதியத்தின்
கண்ணியந்தன்னைக் காக்கின்ற அதிபதி நீ
பஞ்சதசகமகத்துள் பிர்க்காவும் ஒன்றென்பார்
பஞ்சியது பலபேர்க்குப் பேசாது போம்பிர்க்கா
கொஞ்சமும் பிசகின்றி பிர்க்கா நீ வாசித்தால்
கஞ்சக்கருவியெலாம் கருத்தோடொலிக்குமப்பா
செய்வன திருந்தச் செய்கின்ற செம்மையினாற்
பெய்யெனப் பெய்யும் பேரிசையாய் மழையிங்கு
உற்றமனையாளும் உவந்து பெற்றமக்களுமாய்
மறந்திலை நீ எந்நாளும் மால்மருகன் சேவடியை
சிறந்தசேவையினைச் சீராகச் செய்கின்றாய்
திறந்தமனத்தோடு திருப்புகழ்நீ ஓதுகின்றாய்
பேறுபதினாறும் பெருவாழ்விற் பெற்றுவிட்டாய்
ஆறுபத்து வயதினிலே அரசோச்சும் கலைஞன் நீ
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
வாழ்கவென வாழ்த்தி வழுத்துகிறோம் அவன்பாதம்

நவாலியூர் நா. சச்சிதானந்தன்

### நாதநாதனே வாழ்த்துரைத்தனே

நாதநாதனே நல்லவுள்ளமே
நாலு திக்கிலும்பாயுவெள்ளமே
காது உள்ளவர் யாரு? அன்னவர்
கண் சொருகிடச் செய்யுமுன் குழல்
வேதநாயகன் கூட உன்னிசை
வித்தை கேட்டிடில் மெய்சிலிர்ப்பனே
பாதமாமலர் வைத்து யென்கவி
பத்மநாதனே வாழ்த்துரைத்தனே

காற்றிலுன்னிசை ஏறியெம்மிரு
கா்ைதை வந்தடைகின்ற போதிலே...
தோற்று எம்துயர் தூரவிலகிடும்
துடித்து வாழ்ந்திடும் வாழ்வு மறந்திடும்
நாற்றிசையு முன் நல்லபேர்வைத்தவா!
நாதநாதனே! நம் பத்மநாதனே!
போற்றி! உன்வாழ்வு மேலும் சிறந்திடும்
புதுமை தேடியுன் நாதம் உயர்ந்திடும்.

- புதுவை இரத்தினதுரை

அன்பளிப்பு: சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் 10007

## அரசியல் வாதிகளின் ஆயுதங்கள் அவர்களின் ஆதரவாளர்களிடம்

தெற்கில் அரசியல் வாதிகளின் பாதுகாப்புக்கு என வழங்கப்பட்ட ஆயுதங்கள் அவர்களது ஆதரவாளர்களிடம் எவ்வாறு கை மாறின என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற் கட்டமாக மக்கள் கட்சிச் செயலாளர் வை. சில்வா பொலிஸ் விசாரணைக்கு உள்ளாகியுள்ளார்.

இவருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் தற்பொழுது இவரின் ஆதரவாளர்களிடம் உள்ளதாம்.

## மட்டு. கலாசாலை நாளை திறக்கப்படும்

தற்பொழுது மூடப்பட்டுள்ள மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் இயங்கவுள்ளதாகக் கலாசாலை அதிபர் த. கனகசிங்கம் அறிவித்துள்ளார்.

## தீவுப்பகுதிக் கடலில் கடற்படை ரோந்து அதிகரிப்பு

கடந்த சில நாட்களாக தீவுப்பகுதி கடற்பரப்பில் கடற்படை ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய கடற்பரப்புகளிலேயே கடற்படையினர் தீவிர ரோந்து நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அனலைதீவு - எழுவைதீவுப் பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருவதாகவும் சொல்லப்படுகின்றது. (7)

□ □ □

# நயினையில்கடற்படைகடும்கெடுபிடி வீடுகளில் விளக்கேற்றவும் தடை!

நயினாதீவில் கடற்படையினரின் கெடுபிடிகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நயினாதீவில் இரவில் வீடுகளில் விளக்குக் கொளுத்துவதற்கும், மாலை 6 மணிக்குப் பின்னர் வீடுகளை விட்டு வெளியே நடமாடுவதற்கும் கடற்படையினர் தடை விதித்துள்ளனர். அத்துடன் எக்காரணம் கொண்டும் மீனவர் உட்பட எவரும் கடலில் இறங்கக் கூடாதெனவும் பணிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நயினாதீவில் புதிய காவல் அரண்களை அமைக்கும் வேலையில் படையினர் ஈடுபட்டுள்ளனர். பிரயாணிகள் படகுகள் சோதனை செய்யப்படுவதும் புத்தர் கோவில் துறையிலிருந்து அம்மன் கோவில் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. (20)

## ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் படி

1988, 1989 ஆம் ஆண்டுகளில் கடமையாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்க பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது. (18)

## வெள்ளிக்கிழமைகளில் விடுதலை; இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

இந்து மாணவர்களும் ஆசிரியர்களும் விரதங்களை அனுஷ்டிக்கவும், ஆலய வழிபாடுகளில் ஈடுபடவும் வசதியாக இந்துப் பாடசாலைகளுக்கு பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் விடுமுறை வழங்குமாறு நல்லை ஆதீனமும், யாழ் இந்து இளைஞர் பேரவையும் யாழ் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடுமுறைக்குப் பதிலாக குறித்த இந்துப் பாடசாலைகளில் ஞாயிற்றுக் கிழமைகளில் வகுப்புக்களை நடாத்தலாமெனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## தீபாவளி முற்பணம்

யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கு தீபாவளிப் பண்டிகை முற்பணக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெறத் தகுதியுடைய யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்கள் தங்கள் பகுதித் தலைவர்கள் ஊடாக 15- 10- 91 இற்கு முன் விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (04)

## அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதிகள் அதிரடிப்படையால் சுற்றிவளைப்பு

கிழக்கில் அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதிகளிலும், திருக்கோவில், தம்பிலுவில், கோமாரி பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இப் பகுதிகளில் புதிய முகாம் அமைக்கும் முயற்சிகளிலும் படையினர் ஈடுபட்டு வருவதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது

## 7 கோடி ரூபா துண்டு விழுகிறது; நவ. 13 இல் பட்ஜெட்

1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உத்தேச வரவு செலவுத் திட்டக் கணிப்பீட்டின்படி 1992 ஆம் ஆண்டு 6960 கோடி ரூபா துண்டு விழுவதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## சக்தி நிலைய விவரம் சேகரிப்பு

தற்போது வடமாகாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இத் தன்மையே மாற்றுச் சக்தி வளங்களைத் தூண்ட வழியமைக்கின்றது. உயிரியல் வாயு, காற்றுவலுச் சக்தி, சூரிய சக்தி போன்ற முறைகள் ஏற்கனவே சிலரால் நிறுவி இயங்கி வருகின்றது. இவ் உற்பத்தியில் மாதிரியாகத் தமிழீழ ஆய்வு நிறுவனம் செயற்படுகின்றது. யாழ் விஞ்ஞான மன்றமும், இலங்கை பொறியியலாளர் யாழ் கிளைச் சங்கமும் இணைந்து நடாத்திய கருத்தரங்கின் இறுதியில் வடமாகாண சக்தி வளங்களை ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சக்தி வளங்களை விருத்தி செய்யும் நோக்கமாகவே தற்போது இக் குழு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. சக்தி உற்பத்தி நிலையங்களைப் பட்டியல் படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்கூறிய வர்களில் சக்தி உற்பத்தி செய்வோர் யாழ்ப்பாணம் விஞ்ஞானக்கழகம், பிரிவு ''ஆ'' பிரயோக விஞ்ஞானம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியுடன் கடிதத் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ ஆய்வுநிறுவனம் கேட்டுள்ளது

## அதிகரித்த பிரயாணப்படி அரச ஊழியர்க்குக் கிடைக்கும்

அரச திணைக்கள கூட்டுத்தாபன ஊழியர்களின் பிரயாணப்படி அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உத்தியோக பூர்வ பயணங்களை மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு மட்டுமே இந்த அதிகரித்த கொடுப்பனவு கிடைக்கும்.

அவரவர் சம்பளத்திற்கு ஏற்ப இந்த அதிகரிப்பும் இருக்கும்.

## ஒரே நாளில் 25 பேர் கைது! தெற்கில்மீண்டும் ஜே.வி.பி.வேட்டை

தென்பகுதியில் ஜே. வி. பி. யினரைத் தேடி படையினர் தமது வேட்டையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

பெலியத்தை, வீரகட்டிய, அம்பாந்தோட்ட, குடாஓயா பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் ஒரேநாளில் 25 ஜே, வி, பி, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை பதவியுயர்வுக்கு தேவையில்லை

ஏற்கனவே அரச சேவையிலுள்ள ஊழியர்களின் பதவியுயர்வுக்கு அவர்கள் பற்றிய பாதுகாப்புஅமைச்சு அறிக்கை தேவையில்லை என தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிய சுற்றறிக்கையொன்றை பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது,

## வன்செயலினால் பாதிப்புற்ற கோப்பாய்மக்களுக்குநிவாரணம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1990 ஆம் ஆண்டு யூன் மாதத்துக்குப் பின் வன்செயல்களால் இறந்த, ஊனமுற்ற, காணாமற் போனவர்களுக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச்சங்கக் கிளையால் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை நிவாரணம் பெறாதிருக்கும், பாதிக்கப்பட்டவர்கள் உடன் விவரங்களைச் சமர்ப்பித்து நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

## சர்வகட்சி பிரதிநிதிகள் குழு 18 ஆம் திகதி வவுனியா வருகிறது

சகல அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழுவொன்று இம் மாதம் 18-ம் திகதி வெள்ளிக்கிழமை 'வவுனியாவுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

தாண்டிக்குளம் தடை முகாம், முருகனூர் அகதி முகாம் ஆகியவற்றுக்கும் இந்த சர்வகட்சிக்குழு விஜயம் செய்யவுள்ளது

## படையினரை மேலும் இடர்ப்படுத்த விரும்பவில்லைஎன்கிறார் ஜனாதிபதி

நீண்ட யுத்தத்தில் படையினரை ஈடுபடுத்தி அவர்களை இடர்ப்படுத்தத் தான் விரும்பவில்லை என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பனாகொடை இராணுவ முகாமில் நடந்த வைபவத்தில் இராணுவத்தினரின் மத்தியில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

'வடக்கு யுத்தம் விரைவில் முடிவுக்கு வரவேண்டும். யுத்தத்தினால் பெரும் இடர்களை அனுபவிக்கும் படையினர் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இதற்காகப் புதிய திட்டங்களை நான் தீட்டவுள்ளேன்' என அவர் அங்கு தனதுரையில் தெரிவித்தார்.


## TACEP-1991

## விசேட அழைப்பிதழ்

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

சென்ற மாதம் இறுதிப் பரீட்சையிற் சித்தியடைந்தோருக்குரிய சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 15- 10 91 பி. ப 2. 30 மணிக்கு திரு. இரா சுந்தரலிங்கம் - யாழ் மானில கல்வியதிகாரி அவர்களின் தலைமையில் யாழ் இந்துக் கல்லூரி - குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவ மாணவிகளும் இவ்வாண்டு மாணவ மாணவிகளும் நலன் விரும்புவோர் யாவரும் இவ்வைபவத்திற்கு அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

மாணவ நிர்வாக சபை
மானில நிலைய இணைப்பாளர்
மானில இணைப்பாளர்
**Jaffna Tacep Association**

10008


## நீர்வேலியில் கொள்ளை

நீர்வேலி பூதர் மடத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு தினங்களுக்கு முன்பாக நள்ளிரவு நேரத்தில் இனந் தெரியாத சிலர் இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (18)


## அறிவித்தல்

### யாழ் மாநகரசபை

### யாழ் நகர அபிவிருத்தித் திட்டம்

யாழ் நகர அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கான கேள்வி, என்னால் எதிர்வரும் 24-10-91ஆம் திகதி பி பகல் 3 . 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாவும் சபையினால் வழங்கப்படும் படிவத்திற்கமைய இருத்தல் வேண்டும் குறிப்பிட்ட படிவங்களை யாழ் மாநகரசபை மராமத்துப்பகுதியில் எதிர்வரும் 23 10 91 ஆம் திகதி பி. பகல் 3 00 மணிவரை விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
11.10.1991

10005

## திருமலையில் அரச ஊழியர் விடுதியின்றி பெரும் அவதி

திருகோணமலையில் உள்ள வடக்கு கிழக்கு மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கடந்த இரு வருடங்களாக நிலையான வதிவிடம் இல்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபையைத் தவிர ஏனைய பகுதி மாகாண சபைகளில் அவற்றின் ஊழியர்களுக்கு விடுதி வசதிகள் அமைக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் இதற்காக நிதி ஒதுக்கப்பட்டும் அது செயற்படுத்தப்படாமல் அந்த நிதி திரும்பிச்சென்றுள்ளது. 08

## கொழும்பில் டெங்குகாய்ச்சல் 26 பேர் இதுவரை மரணம்

கொழும்பு நகரப்பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரிப்பினால் டெங்குக்காய்சல் வெகுவாகப் பரவியுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்,

இந்நோயின் தொடர்ச்சியான அதிகரிப்பினால் இதுவரை இருபத்தியாறு பேர் மரணமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நுளம்புத் தொல்லையை குறைக்க தற்போது அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. 01

### தடுத்துவைக்கப்பட்டவர்களை

## வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணி உப தலைவர் வடிவேல் தங்கவேல் தர்மலிங்கம், செயலாளர் அப்துல்காதர் ஆகிய இருவரையும் சட்ட வைத்திய பரிசோனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதியரசர் சரத் சில்வா உத்தரவிட்டுள்ளார்.

இவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு கோரி தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளின் போதே நீதியரசர் பொலிஸாருக்கு இவ்வாறு உத்தரவிட்டார்.

பொலிஸ் தலைமையக 6 ஆம் மாடிக்கு மாற்றுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அரச சட்டத்தரணிகள் மறுப்புத் தெரிவித்தனர்,

மனுதார் தரப்பில் சட்டத்தரணிகள் ஏ, விநாயகமூர்த்தியும் மோதிலால் நேருவும் ஆஜரானார்கள்'

---

**மூவாயிரம்...**

தலைமை பொலிஸ் அதிகாரி தேவாரம் திருச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு இந்தியக் கடற்படையினர் பெரிதும் உதவிவருவதாக தெரிவித்த அவர், மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் தமிழக பொலிஸ் படையில் 3000 பேரை விசேட அதிரடிப்படையாக மாற்றும் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்,

இதுவரை 500 தமிழக பொலிஸார் விசேட அதிரடிப் படையாக மாற்றப்பட்டு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் இதுவரை இருபத்தெட்டாயிரம் இலங்கைத் தமிழரே தம்மைப்பதிவுசெய்து கொண்டுள்ளனர் பதிவு செய்யாதவர்கள் இதுவரை 500 பேர் மட்டுமே கைதாகியுள்ளனர் எனவும் தேவாரம் அப்போது சொன்னார்,

---

**நெடியவத்தை..**

தாக்குதலையும் துப்பாக்கிச் சூட்டையும் நிகழ்த்தினர்.

இதனால் அப்பகுதியில் பொதுமக்கள் தரப்பில் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

---

**முடிவை...**

வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தென்னிலங்கை வழங்கறிஞர் குழுவொன்று உயர்நீதிமன்றத்தில் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

---

★ பட்டப்படிப்பை முடித்த வடபகுதி மாணவருக்கு

## வெளிநாட்டு புலமைப்பரிசில் 1992 ஆம் ஆண்டு கிடைக்காது!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்திவுப் பகுதிகளில் பல்கலைக்கழக பட்டப் படிப்பை முடித்த மாணவர்கள் பட்டப்படிப்பின் புலமைப் பரிசில்களை இழக்க வேண்டியுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாவட்டங்களுக்கு அரசாங்க வர்த்தமானி உரிய காலத்தில் கிடைக்காததால் 1992 ஆம் ஆண்டு வெளிநாட்டு புலமைப் பரிசில்களுக்கு இம் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன், கனடா, கொங்கொங், ரினிடாட், நியூஸிலாந்து, நைஜீரியா, அவுஸ்திரெலியா போன்ற நாடுகளில் பொருளியல், மருத்துவம், வர்த்தகம், பல்வைத்தியம் இயந்திரவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு புலமைப்பரிசில் பெறுவதற்கு அரச வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இந்த புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னரே வர்த்தமானிகள் இங்குவந்து சேருவதால் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியவில்லை

இதனால் இம்முறை தென்பகுதி மாணவர்களுக்கு இந்த புலமைப் பரிசில்களைப் பெற அதிக வாய்ப்புக் கிடைக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (01)

---

### மீனவ உபகரணங்கள் பலத்த சேதம்

முல்லை- மணலாறு மாவட்டங்களில் செம்மலை, அளம்பில், குமுழமுனை பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கைகளினால் பெரும்பாலான மீனவர்களின் உடமைகள், சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மீனவர்களின் உடமைகள் விமானத்தாக்குதல்களினால் சேதப்படுத்தப்பட்டதனால் மீனவர்கள் மீன்பிடித் தொழிலினை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

படகுகள், வள்ளங்கள், வலைகள் போன்ற சொத்துக்கள் பெருமளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளன. (07)

---

**இனமொன்றின்...**

பலவெற்றிகளை கண்டுள்ளது காணவும் உள்ளது எனவும் குறிப்பிட்டார்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலர் யோகி தனது உரையில்; கதைகளை எழுதக் கூடியதும், கவிதைகளை புனையக்கூடியதும், ஓவியங்களை வரையக்கூடியதுமான பல ஆற்றலுடையவர்களும் இருந்தும் இவற்றின் வெளிப்பாடுகள் மிகவும் குறைவாகவே உள்ளது, இதற்கு அந்தஸ்து ஒன்றே முக்கிய காரணமாக உளளது. இந்த நிலை மாற வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு இம்மண்ணுக்கு இலக்கிய சேவையாற்றிய மூதுபெரும் எழுத்தாளர்களான அ. செ முருகானந்தன், அல்லை ஆறுமுகம் ஆகியோருக்கு மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையாவினால் நிதியுதவி வழங்கி கௌரவிக்கடபட்டது சிறப்பம்சமாக இடம் பெற்றது. (04)

## தெற்கில் தபால் திணைக்கள 175-வது ஆண்டு தினம்

தபால் திணைக்களத்தின் 175 வது ஆண்டு தினத்தை முன்னிட்டு தெற்கில் தபால் ஊழியர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

வடக்கில் தபால் ஊழியர்கள் பலத்த கஷ்டத்தின் மத்தியில் சிறப்பான முறையில் தமது கடமைகளைச் செய்து வருகின்றபோதிலும் இத்தினத்தில் எந்தப் பரிசுகளும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளியே செல்வதானால் பொலிஸில் பதிய வேண்டும்

அக்கரைப்பற்று பொலிஸ் பகுதியில் வாழும் சகல தமிழர்களும் பொலிஸ் நிலையத்தில் தமது பெயரைப் பதிவு செய்த பின்னரே வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை வெளியார். எவரும் அங்கு வருவதனாலும் பொலிஸில் தெரியப்படுத்த வேண்டும் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது,

## பாராளுமன்ற கலைப்புக்கு ஜனாதிபதி உத்தரவிடமாட்டார்

ஜனாதிபதி தமக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிடலாம் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது தற்போது சாத்தியப்படாத ஒன்றாகிவிட்டது. என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அவரின் ஐ. தே. க, 38 பெரும்பான்மை வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளதால் தற்போது அமைச்சரவையை கலைக்கும் திட்டத்தை ஜனாதிபதி பின்போடுவார் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

---

### மாணவர் பதிவு மந்தம்

1990-91 இல் யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய பௌதீக, விஞ்ஞான பீட மாணவர்களில் 80 க்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் பதிவுகளை மேற்கொள்ளவில்லை யெனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

---

**தமிழ்...**

போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

களிமடு, மேல் கண்டம், பறங்கிவட்டை பகுதிகளில் உள்ள தமிழரின் விவசாயக் காணிகள் பெரும்பான்மையினரால் கடந்த முறை செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன்: இம்முறை பெரும்போகத்துக்கு ஆயத்தப்படுத்தப் படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

---

**மீண்டும்...**

கவே உள்ளது என பி.பி.ஸி. குறிப்பிட்டது.

எனினும் ஐ. தே. க. பிளவடைந்த நிலையில் நடைபெறவுள்ள சார்க் மாநாடு, பொருளாதார நிலை, நாட்டில் மீண்டும் சமாதானம் போன்ற விடயங்களில் ஜனாதிபதி உடனடி முடிவுகாண வேண்டிய நிலையில் உள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

---

### சி. க. கூ. சமாச விசேட கூட்டம்

யாழ்மாவட்ட சி க கூ, சங்க சமாசத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (04

---

**திருமதி**

பெற்ற முதல்கட்ட வாக்களிப்பில் வெற்றி பெற்றார்.

ராஜீவ் காந்தி மரணமான பின் இத்தொகுதி வெற்றிடமானதால் அங்கு இடைத்தேர்தல் தற்போது நடைபெறவுள்ளது சோனியா காந்தி அநேகமாக தனது கணவரின் தொகுதியில் போட்டியிடுவார் என்றே கருதப்பட்டது. எனினும் திருமதி சோனியா இவ்விடயத்தில் இதுவரை மௌனமாக இருந்து வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னர் பிரதமர் பதவிக்கு போட்டியிடுமாறு வற்புறுத்தப்பட்டபோதும் சோனியா ஒத்துக்கொள்ளவில்லை என்பது தெரிந்ததே.


## உதயம் இசை நாடா வெளியீடு

எமது நிதர்சனம் நிறுவனத்தின் எட்டாவது தயாரிப்பான
உதயம் இசை நாடா வெளியீடும்,

அதனைத் தொடர்ந்து அதே கலைஞர்களால் இசைக்கப்படும்
இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

★ யாழ் இந்துக் கல்லூரி

★ 1991-10-13 ஞாயிற்றுக்கிழமை

★ காலை 10 மணி

நிதர்சனம்
தமிழீழம்

குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்

10006


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 13 10·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.